ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் நாணயத்திணைக்களம்

திகதி 06.07.2021

# இலங்கை - சீனாவுக்கிடையிலான 65 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் சீன பொதுவுடைமைக் கட்சியின் 100 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கி ஞாபகார்த்த நாணயக் குற்றிகளை வெளியிடுகின்றது

இலங்கை மத்திய வங்கி ரூ. 1000 முகப் பெறுமதியையுடைய தங்கம் மற்றும் வெள்ளி ஒரே சித்தரிப்புகளுடனான ஞாபகார்த்த நாணயக் குற்றிகளை இலங்கை - சீனாவுக்கிடையிலான 65 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் சீன பொதுவுடைமைக் கட்சியின் 100 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக வெளியிட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையைப் பாராட்டும் முகமாக இலங்கை அரசின் வேண்டுகோளின்படி நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நாணயங்களின் விரிவான விபரம் மற்றும் உற்பத்திக் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| நாணயத்தின் முன்பக்கம் | நாணயத்தின் பின்பக்கம் |
|---|---|
|  |  |
| நாணயத்தின் முன்பக்கத்தில் மத்தியில் தாமரைத்தடாக மகிந்த ராஜபக்ஷ திரையரங்கின் படம் இலங்கை மற்றும் சீன தேசியக் கொடியுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது. திரையரங்கின் கீழே நாணயத்தின் வருடமான “2022” பெரிய இலக்கங்களில் குறிக்கப்பட்டுள்ளது. “ இலங்கை - சீனா 65 ஆண்டுகள்” என்ற சொற்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழில் நாணயத்தின் சுற்றுவட்டத்தில் (வலஞ்சுழியாக) காணப்படுகின்றன. | குற்றியின் பின்புறத்தில் “சீன பொதுவுடைமைக் கட்சி” என்ற சொற்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் காணப்படுவதுடன் “1000” என பெரிய இலக்கங்களில் முகப்புப் பெறுமதியும் “1921 - 2021” என்ற வருடங்களும் 100 என ஆண்டு நிறைவும் காணப்படுகின்றது. “இலங்கை” என்ற சொல் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழில் குற்றியின் மேல் ஓரத்தின் விளிம்பில் (வலஞ்சுழியாக) தோன்றுகின்றது. “ரூபா” என்ற சொல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் குற்றியின் கீழ் ஓரத்தின் விளிம்பில் தோன்றுகின்றது. |

| தங்க நாணயத்தின் விபரங்களும் உற்பத்திக் குறிப்புக்களும் | | | |
|---|---|---|---|
| உலோகம் | தங்கம் (22கரட்) | வடிவம் | வட்டம் |
| குற்றியின் வகை | கறை படியாதது | ஓரம் | வெட்டப்பட்டது |
| விட்டம் | 25.4 மி.மீ | நிறை | 12.0 கிராம் |
| வழங்கல் | 500 குற்றிகள் | ஒரு நாணயத்தின் விற்பனை விலை | ரூ.222,000/- |

| வெள்ளி நாணயத்தின் விபரங்களும் உற்பத்திக் குறிப்புக்களும் | | | |
|---|---|---|---|
| உலோகம் | வெள்ளி (0.925) | வடிவம் | வட்டம் |
| குற்றியின் வகை | கறை படியாதது | ஓரம் | வெட்டப்பட்டது |
| விட்டம் | 38.61 மி.மீ | நிறை | 28.28 கிராம் |
| வழங்கல் | 2,000 குற்றிகள் | ஒரு நாணயத்தின் விற்பனை விலை | ரூ. 17,000/- |

முதலாவது குற்றி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் அவர்கள் மூலம் இலங்கையின் அதிமேதகு சனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கு 06.07.2021 அன்று சனாதிபதி செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.



இந்நாணயக்குற்றி உறுதிச் சான்றிதழ் ஒன்றுடன் கவர்ச்சிகரமான அன்பளிப்புப் பெட்டியொன்றினுள் வழங்கப்படுகின்றது. இவ்வரையறுக்கப்பட்ட தங்க நாணய வெளியீடானது நாணயத் திணைக்களத்தினூடான முன்பதிவுகளுக்கு பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை, சென்றல் பொயின்ட் கட்டடம், இல. 54 சதம் வீதி, கொழும்பு 01 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் விற்பனைக் கருமபீடத்தினூடாக மட்டும் 12.07.2021 தொடக்கம் மேற்கூறப்பட்டுள்ள விலையில் விற்பனை செய்யப்படும். மேலும், வெள்ளி நாணயமானது மேற்கூறப்பட்ட விலையில் 12.07.2021 தொடக்கம் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையின் விற்பனைக் கருமபீடத்தினூடாக விற்பனை செய்யப்படும்.

| மேலதிகத் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: | தொலைபேசி | தொலைநகல் |
|---|---|---|
| நாணயக் கண்காணிப்பாளர் | +94 11 247 7355 | +94 11 247 7726 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | +94 11 247 7152 | +94 11 247 7701 |
| மின்னஞ்சல் | currency@cbsl.lk | |
| பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிசாலை | +94 11 438 7405<br>+94 11 244 4503 | |

நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01